**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**S.C.42/2019 – P.W.15**

Deposition of witness for Prosecution:

Name : திரு. மகேந்திரன் Father's Name. இராமு

Village : சென்னை குற்ற ஆவண காப்பகம், பெருநகர காவல்துறை.

Date : 10.03.2025

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 10.03.2025.

**( எதிரி ஆஜர். )**

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் தற்போது சென்னை பெருநகர காவல்துறையில் குற்ற ஆவண காப்பகத்தில் காவல் உதவி ஆணையாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.10.2013 ஆம் தேதி நான் கரியாப்பட்டினம் காவல் ஆய்வாளராக பணியிலிருந்தபோது, கரியாப்பட்டினம் காவல் நிலைய குற்ற எண்.181/2010 சட்டப்பிரிவுகள் 294(b), 324, 307ன் கீழான இதச வழக்கில் விசாரணை அதிகாரியாக இருந்த திரு. N.S. இராசேந்திரன் காவல் ஆய்வாளர் வேதாரண்யம் பொறுப்பு கரியாப்பட்டினம் அவர்களிடமிருந்து வழக்கின் மேல் விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன். மேற்படி வழக்கில் காவல் ஆய்வாளர் திரு. N.S. இராசேந்திரன் அவர்கள் ஏற்கனவே, சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்திருந்தார். மேற்படி சாட்சிகளான விஜயா, பன்னீர்செல்வம், செந்தமிழ்செல்வன், ராகவன், சாம்பசிவம், வசந்தா, சுப்பிரமணி, பாலு மற்றொரு சுப்பிரமணி, த/பெ. பாலகிருஷ்ணன், கண்ணன் மற்றொரு சாட்சியான பன்னீர்செல்வம், த/பெ. பக்கிரிசாமி, மருத்துவர் திரு.செந்தில்குமார் மற்றும்

காண்காணிப்பாளர், நாகப்பட்டினம் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு. ராம இளங்கோவன், மருத்துவர் திரு. அன்வர் சதாக், மருத்துவர் திரு. ரத்தினசபாபதி மற்றும் காவல் உதவி ஆய்வாளர் வனிதா ஆகியோர்களை நான் மீண்டும் விசாரணை செய்ய திரு. N.S. இராசேந்திரன் அவர்களிடம் கொடுத்த வாக்குமூலத்தை தெரிவித்ததால் மீண்டும் நான் வாக்குமூலங்கள் பதிவு செய்யவில்லை. உதவி இயக்குநர், குற்ற வழக்கு தொடர்பு, நாகப்பட்டினம் அவர்களிடம் அறிவுரை பெற்று 31.10.2012 ஆம் தேதி மேற்படி எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 326, 325 மற்றும் 307ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

அசா.2 சுயநினைவுடன் இருந்ததை மறைத்து அவர் மயக்க நிலையில் இருந்தது போல காட்டி அவரது மனைவியான அசா.1 விஜயாவிடம் தவறான புகார் வாக்குமூலம் பெறப்பட்டு அதனடிப்படையில், இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அசா.2 மருத்துவரிடம் தன்னை நான்கு நபர்கள் தாக்கியதாக கூறியுள்ளார் என்று சொன்னால் சரிதான். அதுசம்பந்தமாக நான் விசாரணை செய்து தெரிந்துகொண்டேனா ? என்றால் தெரிந்துகொண்டேன். எனது விசாரணையில் மூன்று நபர்கள் தாக்கியதாகத்தான் கூறியுள்ளார். சரிவர புலன் விசாரணை செய்யாமல் தவறான இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. சான்று பொருட்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து ஜோடித்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. மருத்துவ ஆவணங்கள் வழக்கிற்கேற்றவாறு ஜோடித்துள்ளோம் என்று சொன்னால்

சரியல்ல. சம்பவம் தனக்கு நடந்தது போல் அசா.1னிடம் புகார் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. கொடுங்காயம் என்பதை உறுதிப்படுத்த நுண்கதிர் படம், நுண்கதிர் அறிக்கை, சிடி ஸ்கேன் போன்றவற்றை பெற்று தாக்கல் செய்துள்ளேனா ? என்றால் இல்லை.

**மறுவிசாரணை இல்லை.**